சுற்றறிக்கை இல 07/2017

சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

பம்பலப்பிட்டிய.

2017 மே மாதம்

<u>**சீருடை கோவையைத் திருத்துதல்**</u>

தொடர்பு: அ. சீருடைக் கொடுப்பனவு - 2010 சனவரி - சிவில் பாதுகாப்புத் திணைக்களம்.

ஆ. பணிப்பாளர் நாயகத்தின் இல 08/2015 மற்றும் 2015.07.02 ஆம் திகதிய சுற்றறிக்கை

01. 2010 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புப் படை அங்கத்தவர்களுக்கான சீருடைக் கோவை பின்வருமாறு திருத்தப்படுகின்றது. அந்த திருத்தம் 2017.06.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு சகல படைப் பிரிவுகள் மற்றும் பயிற்சிப் பாடசாலைகளின் கட்டளையிடும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(1) அங்கத்தவரின் பெயர் (Name Tag) சீருடையின் மேல் சட்டையின் வலது பக்க சட்டைப் பைக்கு மேலால் சட்டைப் பைக்கு சமாந்தரமாக நடுவில் அமையுமாறு அணிதல்.

(2) சீருடையின் மேல் சட்டையின் இடது பக்க சட்டைப் பைக்கு மேலால் சமாந்தரமாக "CIVIL DEFENCE FORCE" எனும் பதாகையை அணிதல்.

(3) எவரேனுமொருவர் பதக்கங்கள் / நாடா பட்டிகளுக்கு உரிமையுள்ளவர் எனின் அதனை இடது பக்க சட்டைப் பைக்கு மேலால் மத்தியில் அமையுமாறு "CIVIL DEFENCE FORCE" எனும் பதாகைக்கு மேலால் அணிதல்.

(4) அந்தந்த அங்கத்தவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி சின்னங்களை வலது பக்க பெயருக்கு (Name Tag) க்கு மேலால் பாடநெறி சிரேட்ட நிலைக்கு ஏற்ப அணிதல்.

02. பணிப்பாளர் நாயகத்தின் இல 08/2015 மற்றும் 2015.07.02 ஆம் திகதிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக சிவில் பாதுகாப்புத் திணைக்கள அங்கத்தவர்களின் கவனம் பின்வரும் விடயங்களுக்கும் ஈர்க்கப்படுவது முக்கியமாகும்.

(1) சீருடையை அனிந்திருக்கும் சந்தர்ப்பத்தில் தான் அணிந்துள்ள மாலை தெரியாத வண்ணம் அணிதல்.

(2) திருமண ஒப்பந்த மற்றும் திருமண மோதிரங்களை அணிய முடிமென்பதோடு அலங்கார மோதிரங்கள் அணிவது தடைசெய்யப்பட்டுள்ளது.

(3) நாளாந்த கடமை நேரங்களில் கைக்கடிகாரம் அணிய முடியும். ஆயினும் அணிவகுப்புக்களில் பங்குபற்றும் போது கைக்கடிகாரம் அணிய முடியாது.

(4) கை அணிகள் (உதாரணம் : பேஸ்லெட், காப்புகள் மற்றும் ஏனைய அழங்கார அணிகலன்கள்) அணிவது தடைசெய்யப்பட்டுள்ளது.

(5) தொழில்நுட்ப உபகரணங்கள் (உதாரணம் : ஹெட்செட், இயர்போன்) போன்றவற்றை அணிவது தடைசெய்யப்பட்டுள்ளது.

(6) சீருடையில் இருக்கும் போது விசேட மருத்துவ நிபுணர் ஒருவரின் சிபாரிசு இன்றி பல்வேறுபட்ட மூக்குக் கண்ணாடிகளை அணிவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

(7) பச்சை குத்துவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

(8) சீருடையில் இருக்கும் போது வெற்றிலை மற்றும் சுவின்கம் சாப்பிடுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

(9) அத்தியவசிய தேவைக்காகவன்றி கடமை நேரத்தில் கடைகளுக்கு செல்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

03. மேலும், சீருடை அணிந்து வாகனங்களில் பிரயாணம் செய்யும் போது / வாகங்களை செலுத்தும் போது கெப் / தலைக் கவசம் அணிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**சந்திரரத்ன பல்லேகம**

**பணிப்பாளர் நாயகம்**